1987 நவம்பர் 16]

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எடுத்து பல ஆண்டுகள் ஆகியும், அதற்கு நில ஆர்ஜிதம் செய்தும், ஆர்ஜிதம் செய்த நிலம் முழுவதையும் விவசாயிகள் எடுத்து விவசாயப் பயிர் செய்து விட்டார்கள். மேலும் மதுரையிலே இருந்து திருச் செந்தூர், தூத்துக்குடி செல்ல வேண்டுமானால், அருப்புக் கோட் டையைத் தாண்டிதான் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக் கிறது. அப்படிச் செல்கிற நேரத்தில் அருப்புக்கோட்டைக்கும் காரியாபட்டிக்கும் மத்தியிலே பாளையம்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்தப் பாளையம்பட்டி என்ற ஊர் வழி யாகச் செல்கிற நேரத்தில் தெப்புக்குளமும் கோயிலும் இருக் கின்றன. அந்த இடத்திலே அடிக்கடி உயிர் இழப்பும், விபத் துக்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே பாளையம்பட்டி ஊருக் குள்ளேயும், அருப்புக்கோட்டை நகரத்திற்குள்ளேயும்தான் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ½ மணி நேரத் திற்கு ஒரு பஸ் போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப்போகிற நேரத்தில் ஜன நெருக்கடியான பகுதியாக இருக்கிறபடியால் இந்த பை-பாஸ் போடும் திட்டத்தை உடனடியாக எடுத்து நிறைவேற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல 5 1/4 லட்சம் ரூபாய் செலவழித்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாற்றுப் பாதையை அமைப்பதற்கு ஏறத்தாழ 60 லட் சம் ரூபாய் ஆகும் என்று திட்டம் தீட்டி இப்போது கைவசம் உள்ளது. ஆனால் நிதி பற்றாக் குறையின் காரணமாகத்தான் தள்ளிப்போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எதிர் காலத் தில் நிதி நிலையை அனுசரித்து வேகமாக எடுப்பதற்கான நட வடிக்கை எடுக்கப்படும்.

நாகை துறைமுகம்.

130—(*வினா எண். 14033) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[1987 நவம்பர் 16

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய பரிசீலனை எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாகை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தற்போதில்லை என்று சொன்னாலும், அந்தத்துறை முகத்திற்கு வந்துகொண்டிருந்த சரக்குக் கப்பல்கள் தற்போது வருவது பெரும்பகுதி நின்று விட்டது. அதனால் அதை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த 500 குடும்பங்களுக்கு மேல் பட்டினி கிடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு, அரசும் அமைச்சரும் தங்கள் செல்வாக்கையும் முயற்சியையும் பயன்படுத்தி மேலும் தொடர்ச்சியாக சரக்குக் கப்பல்கள் நாகை துறைமுகத்திற்கு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தத்துறைமுகத்தை விரிவாக்குவதற்கான திட்டம் இல்லையே ஒழிய ஏற்கெனவே உள்ள வசதிகளை அதிகப்படுத்து வதற்காக 25 லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டும் என்ற திட்டம் அரசிடத்திலே இருக்கிறது, இப்போது அங்கே வந்து கொண்டிருந்த கப்பல்கள் வாராமல் இருக்கின்றன. அவை வர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதனுடைய சாத்தியக் கூறுகள் என்ன என் பதைப்பற்றி இப்போது சொல்ல முடியாது. ஆனால் அதற் கான முயற்சிகளை நாம் எடுக்கலாம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துறைமுக அபிவிருத்திக்காகச் சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டதாக அவையிலே அறிவிக்கப்பட்டது. அந்த 50 லட்சம் ரூபாயும் பயன் படுத்தப்பட்டிருக்கிறதா, செலவு செய்யப் பட்டிருக்கிறதா? அபிவிருத்தி வேலைகள் எதுவும் நடைபெற்றிருக் கின்றனவா அல்லது அந்தப்பணம் திரும்பப்பெறப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். விரிவாக்கத்திற்காக பணம் ஒதுக்கப்படவில்லை என்றாலும், ஏற்கனவே இருந்த வசதிகள் பாதிக்கப்பட்டிருப்பதை சரி செய்வதற்காகவும் பழுது பார்ப் பதற்காகவும் பணம் ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டிலே 25 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. மற்ற பணத்தைத் தொடர்ந்து செலவழிப் பதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.